**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**
**C021 இலக்கணம் – 1 (எழுத்து)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தமிழில் மிகவும் பழைய இலக்கண நூலாக விளங்குவது எது?
2. நன்னூலின் ஆசிரியர் யார்?
3. தொல்காப்பியத்தில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?
4. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. தளை என்பதன் பொருள் யாது?
6. தொல்காப்பியர் காற்றுப் பொருந்தும் இடங்களாகக் குறிப்பிடும் உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
7. நன்னூலில் ஆவி என்னும் சொல் உணர்த்துவது யாது?
8. பதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
9. எதிர்கால இடைநிலைகள் எத்தனை?
10. புணர்ச்சி என்பதன் பொருள் யாது?
11. அகர ஈற்றுப் பெயரெச்சத்திற்கு முன்னர் வரும் வல்லினம் எவ்வாறு வரும்?
12. முச்சுட்டு என்று கூறப்படுவன யாவை?
13. ஆவிரை + வேர் – சேர்த்து எழுதுக.
14. கிழக்குத் திசையையும் மேற்குத் திசையையும் குறிக்க வழங்கும் சொற்கள் யாவை?
15. பெயர்ச் சொல்லின் வகைகள் யாவை?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. சந்தி இலக்கணம் என்றால் என்ன? எ.கா. தருக.
2. தனிநிலை என்றால் என்ன?
3. உரிச் சொல்லின் இலக்கணம் யாது?
4. மொழிநூலார் பகுப்பின்படி தமிழ் உயிர் எழுத்துக்களைப் பிரித்துக் காட்டுக.
5. சார்பு எழுத்து எத்தனை? அவை யாவை?
6. விகுதியின் இலக்கணத்தைக் கூறுக?
7. விட்டிசை என்றால் என்ன?
8. தேங்காய் – நன்னூல் விதிப்படி பிரித்துக் காட்டுக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சொல்லின் வகைகள் குறித்து கட்டுரை வடிவில் விடை தருக.

   (அல்லது)

   (ஆ) புறப்பொருள் இலக்கணம் குறித்து விளக்குக?

2. (அ) மெய்யெழுத்துகளின் பிறப்புப் பற்றி மொழி நூல் தெரிவிக்கும் செய்திகளைத் தொகுத்தெழுதுக?

   (அல்லது)

   (ஆ) இடைநிலை என்றால் என்ன? அதன் வகைகளை விளக்கி வரைக.

3. (அ) பொருளின் அடிப்படையில் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? விளக்குக.

   (அல்லது)

   (ஆ) இக்காலத் தமிழில் வல்லினம் மிகா இடத்தை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

❋ ❋ ❋